ஸ்ரீகோ$_3$தோ$_3$பமாஷ்டகம்

(உரை: ஸ்ரீவில்லிபுத்தூர் வித்$_3$வான் ஸ்ரீ.உ.வே.கண்ணன் ஸ்வாமி)

ஶ்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணனுக்கு ஐந்து நிலைகள் உண்டென்று வடமொழிமறையும், தென்மொழிமறையும் கூறுகின்றன. அவற்றுள் ''பின்னானார் வணங்கும் சோதி'' என்று திருமங்கைமன்னனால் போற்றப் படுகின்ற அர்ச்சாவதாரமே சிறந்ததாகும். ''அதிலே தேங்கின மடுக்கள்போலே அர்ச்சாவதாரம்'' என்று பிள்ளைஉலகாரியரும் பணித்துள்ளார். பகவான் எப்போது அவதரித்தாலும் பிராட்டியும் உடன் அவதரித்தே தீருவாள். பெருமாள் அவதரிக்கும் போது பிராட்டியும் உடன் அவதரிக்கவில்லையானால் அவ்வவதாரமே ரஸமில்லாமல் போய்விடும் என்பதனை ஸ்ரீபராசரபட்டர் ''யதி$_3$ மநுஜ திரஶ்சாம் லீலயா துல்யவ்ருத்தே: – அநுஜநுரநுரூபா தே$_3$வி நாவாதரிஷ்ய: – அஸரஸமப$_4$விஷ்யந்'' என்று ஸ்ரீகுணரத்நகோஶத்தில் அருளிச்செய்துள்ளார். ''ராக$_4$வத்வேऽப$_4$வத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி'' என்றார் பராசரர். ஸ்ரீவராஹாவதாரத்தில் பூமிப்பிராட்டியும், ஸ்ரீராமாவதாரத்தில் ஸீதாப்பிராட்டி யும், ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் ருக்மிணியும் நப்பின்னையும் ப்ரதாந மஹிஷிகளா வார்கள். அது போன்று அர்ச்சாவதாரத்தில் ஸ்ரீஆண்டாளே ப்ரதாந மஹிஷியாவாள். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் வைபவத்தைப்பற்றிய பழைய துதிநூல்கள் பல உள. ஸ்ரீகோதாபரிணயசம்பூ, ஸ்ரீகோதாகுணரத்ந கோஶம், ஸ்ரீகோதா அஷ்டோத்தரஶதநாமஸ்தோத்ரம், ஸ்ரீகோதாசதுஶ்லோகீ, ஸ்ரீகோதோபமாஷ்டகம், ஸ்ரீகோதாசூர்ணிகா முதலியன. இவையாவும் வடமொழியில் உள்ளன. இவற்றுள் ஸ்ரீகோதோபமாஷ்டகம் என்கிற துதி நூலை இனி காண்போமாக.

ஸ்ரீவில்லிபுத்தூரில் மார்கழி மாதக்கடைசியில் ஸ்ரீஆண்டாளுக்கு நீராட்ட உத்ஸவம் வெகுவிமர்சையாக இன்றும் நடைபெற்றுவருகின்றது. திருமுக்குளக் கரையில் நீராட்ட உத்ஸவ மண்டபம் இன்றும் பொலிவுற்று விளங்குகிறது. விஶேஷ உபசாரத்துடன் ஆண்டாளுக்கு சௌரியுடன் எண்ணெய்காப்பு சாத்தப்படுகிறது. பின்னர் திருமுக்குளத்தில் நீராட்டம் நடைபெறும். அதுசமயம் திருமஞ்ஜந கட்டியமாக இந்த கோதோபமாஷ் டகம் ஒருநாளைக்கு ஒரு ஶ்லோகம் வீதம் விளக்கத்துடன் ஸ்ரீவேதப்பிரான் பட்டரால் திருமஞ்ஜந காலத்தில் ஓதப்பட்டுவந்தது. இதனை இயற்றியவர் யார் என்று தெரியவில்லை. பெரியாழ்வார் வம்ஶ்யராகப் போற்றப்படுகின்ற வேதப்பிரான்பட்டராக விளங்கிய கேசவகவிராஜரால் இயற்றப்பட்டிருக்கலாம்.

1. அன்னமும் ஆண்டாளும்

सन्मानसाब्ज प्रवणां सारासारविवेकिनीम् ।
सद्गतिं शुद्धरूपां त्वां गोदे ! हंसीं प्रचक्षते ॥

ஸந்மாநஸாப்$_3$ஜ ப்ரவணும் ஸாராஸாரவிவேகிநீம் I
ஸத்$_3$க$_3$திம் ஶுத்$_3$த$_4$ரூபாம் த்வாம் கே$_3$ாதே$_3$ ஹம்ஸீம் ப்ரசக்ஷதே II

கோதாதேவியே! தேவரீர் ஒரு அன்னப்பறவையாகவே பேசப்படுகின்றீர். அன்னம் நல்ல தாமரைமலரில் தான் வீற்றிருக்கும். அன்னமானது பாலும் நீரும் கலந்திருந்தால் அஸாரமான நீரை நீக்கி ஸாரமான பாலையே பருகுகிறது. அன்னம் நடையழகு மிக்கதாக விளங்கும். மேலும் அன்னம் தூயவெண்ணிறத்ததாகவிருக்கும்.

தேவரீரோவெனில், ஸாதுக்களது மனமாகிய தாமரைமலரிலே எக்காலத்தும்குடிகொண்டிருக்கிறீர். ஸாதுக்கள் தேவரீரை எப்போதும் மனத்தால் போற்றிப் புகழ்ந்து கொண்டேயிருக்கிறுர்கள். வேதஶாஸ்த்ர இதிஹாஸ புராணங்களில் அஸாரம், அல்பஸாரம், ஸாரம், ஸாரதரம், ஸாரதமம் என்று பலவகைப்பட்ட பகுதிகளிருக்கும். தேவரீர் அவற்றில் மற்றவற்றை நீக்கி ஸாரதமமான விஷயங்களையே பகுத்தறிந்து ஸகலவேத ஸாரமான ப்ரபந்தங்களை அருளியுள்ளீர். தேவரீர் அவ்வன்னங்களுக்கும் நடைபயிற்றுவிப்பவராயுள்ளீர். நன்னடத்தை உள்ளவராயும் உள்ளீர். மேலும் சுத்தஸத்வமயமாகவே உள்ளீர். எனவேதான் உலகத்தார் உம்மை அன்னமாகவே கூறுகிறுர்கள்.

2. மணியும் கோதையும்

तेजोमयस्वरूपत्वात् श्रीमत्सेवित वैभवात् ।
चिन्तामणिसमागोदे ! देशिकैः त्वमिहोच्यसे ॥

தேஜோமயஸ்வரூபத்வாத் ஶ்ரீமத்ஸேவித வைப$_4$வாத் I
சிந்தாமணிஸமா கே$_3$ாதே$_3$! தே$_3$ஶிகை: த்வமிஹோச்யஸே II

ஶ்ரீகோதாதேவியே! ஆசார்யவர்யர்களாலே தேவரீர் சிந்தாமணியாகப் போற்றப்படுகிறீர். மணியானது ஒளிமயமான ஸ்வரூபத்தை உடையதாக இருக்கும். எம்பெருமாஞலே மார்பில் இடையருது அணியப்பெற்றதாக விருக்கும் ஏற்றம் உடையதாகவுமிருக்கும், வேண்டுவார்க்கு வேண்டுமவற்றையெல்லாம் தரக்கூடியதாகவும் இருக்கும்.

தேவரீரோவெனில், ''தூ$_3$ர்வாத$_3$ளப்ரதிமயா தவ தே$_3$ஹகாந்த்யா'' என்று வேதாந்தாசார்யர் போற்றியவாறு அறுகம்புல் போன்றமேனி நிறத்தவராய் எம்பெருமானுக்கே ஒளியூட்டக்கூடியவராய் தேஜோமயமாய் விளங்குகிறீர். எம்பெருமானுக்கு வலப்பக்கத்தில் ஶ்ரீமஹாலக்ஷ்மீ இருப்பதுபோன்று இடப்பக்கத்தில் வீற்றிருந்து அவருக்கு ஆநந்தத்தை அளிக்கும் ஏற்றம் பெற்றுள்ளீர். ''நீங்காத செல்வம் நிறைந்து'' என்றும் ''வாயுநன்மக்களைப்பெற்று மகிழ்வர்'' என்றும், ''எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்'' என்றும் உமது ஶ்ரீஸூக்திகள் மூலம் வேண்டுவார்க்கு வேண்டியவற்றையெல்லாம் அளித்துவருகின்றீர். இத்தகைய தேவரீரை ஆசார்யர்கள் சிந்தாமணி என்று சொல்வது முற்றிலும் பொருத்தமன்ருே.

3. கற்பகவ்ருக்ஷமும் கோதையும்

अनेकशाखोज्ज्वलित स्वरूपात् अनन्तभोगिप्रिय वर्धकत्वात् ।
सुरेशभूषासुमनः प्रदानात् सुरद्रुमेणासि समाद्य गोदे ॥

அநேகஶாகோ2ஜ்ஜ்வலித ஸ்வரூபாத் அநந்தபோ4கி3ப்ரியவர்த்த4கத்வாத்।
ஸுரேஶபூ4ஷா ஸுமந: ப்ரதா3நாத் ஸுரத்3ருமேணாஸி ஸமாத்3யகோ3தே3 ॥

அம்மா கோதாதேவியே! தேவரீர் தேவலோகத்திலுள்ள கற்பகதருவுக்கு ஸமானமாக விளங்குகிறீர். கற்பகவ்ருக்ஷமானது பற்பல கிளைகளையுடையதாய், ஒளிமிக்கதாய், பற்பல இன்பங்களை அநுபவிக்க விரும்புமவர்களுக்கு அவரவர் விரும்பியவற்றைக் கொடுத்து மேன்மேலும் இன்புறச்செய்கிறது. தேவேந்திரனும், சசியும் பெரிதும் விரும்பக்கூடிய புஷ்பங்களையும் தருகிறது.

அம்மரத்தைப்போன்றே தேவரீரும் பற்பல ஶாகைகளை உடைய வேதத்தின் ஸாரமாக விளங்கும் திருப்பாவை, நாச்சியார்திருமொழி ஆகிய ப்ரபந்தங்களை அருளிச்செய்து உலகமெங்கும் புகழொளி வீசித்திகழுமவராய் உள்ளீர். திருவநந்தாழ்வானாகிற பாம்பணைமேல் பள்ளிகொண்டிருக்கும் எம்பெருமானுக்கு ப்ரியத்தை வளரச்செய்யுமவராயும் உள்ளீர். நித்யஸூரிகளுக்கு தலைவனான எம்பெருமானும் விரும்பி அணிந்து கொள்ளும் வகையில் பூமாலை சூடிக்கொடுத்துள்ளீர். எனவே கற்பகதருவுக்கு ஒப்பாவீர்.

4. சூரியனும் சூடிக்கொடுத்தவளும்.

सद्गोविलासेन तमोहरत्वात् समस्तसद्वन्दित मण्डलत्वात् ।
पद्मानानौज्ज्वल्यकर प्रभावात् भासीह गोदे रवितुल्य शीला ॥

ஸத்3கோ3விலாஸேந தமோஹரத்வாத்
ஸமஸ்தஸத்3வந்தி3த மண்ட3லத்வாத் ।
பத்3மாநநௌஜ்ஜ்வல்யகர ப்ரபா4வாத்
பா4ஸீஹ கோ3தே3 ரவிதுல்யஶீலா ॥

ஸ்ரீகோதாதேவியே! தேவரீர் சூர்யனுக்கு ஸமமாக ஒளிமிக்கவராய் விளங்குகிறீர். சூரியன் "கதிராயிரமிரவி" என்று புகழப்படுமவனாய் ஆயிரக் கணக்கான கிரணங்களை உடையவனாய் விளங்குகிறான். உலகில் உள்ள புறவிருளையெல்லாம் போக்குகிறான். உலகில் வாழும் அனைத்து சான்றோர் களாலும் காலையிலும் மாலையிலும் ஸந்த்யாவந்தனம் என்ற பெயரால் வணங்கப்பெறும் மண்டலத்தை உடையவனாய் உள்ளான். தாமரைமலர்களை யெல்லாம் தனது ஒளிமிக்க கிரணங்களால் மலரச்செய்கிறான்.

சூரியன் புறவிருளைத்தான் நீக்குகிறான். தேவரீரோவெனில், வேதமனைத்துக்கும் வித்தாகிய திருப்பாவையையும், நாச்சியார்திருமொழி யையும் அருளி, உலகில் உள்ள அனைத்து மக்களுடைய அஜ்ஞாநமாகிய அகவிருளையும் போக்குவதோடன்றி ஞானஒளிவீசித்திகழ்கிறீர். மண்ணுலகில் மாந்தர் அனைவரும் எப்போதும் வணங்கும்படியான தேஜோமண்டலத்தை

யுடையவராய் உள்ளீர். தாமரை போன்ற திருமுகத்தையுடைய எம்பெருமானுக்கும் பேராநந்தத்தை விளைத்து அதனால் 'அப்ரமேயம் ஹி தத்தேஜ:' என்று போற்றும் வகையில் அத்தாமரையை மலரச்செய்வதால் சூரியனுக்கு ஒப்பாவீர்.

5, **சந்திரனும் ஆண்டாளும்**

कलानिधित्वात् कमलात्मकत्वात् भवार्ति ताप क्षपणस्वशैत्यात् ।
सदा महाविष्णुपदानुषङ्गात् हिमांशुतुल्य त्वमिहासि गोदे ॥

கலாநிதி$_4$த்வாத் கமலாத்மகத்வாத் ப$_4$வார்த்திதாப க்ஷபணஸ்வஶைத்யாத் ।
ஸதா$_3$ மஹாவிஷ்ணுபதா$_3$நுஷங்கா$_3$த் ஹிமாம்ஶுதுல்யா த்வமிஹாஸி கோ$_3$தே$_3$ ॥

ஸ்ரீஆண்டாளே! தேவரீர் சந்திரனுக்கு ஸமானமாக விளங்குகிறீர். சந்திரன் பதினாறுகலைகளாகிய செல்வங்களை உடையவனாக விளங்குகிறான். "ஸலிலம் கமலம் ஜலம்" என்கிற அமரவாக்கியத்தின்படி கமலம் என்றால் தண்ணீர் என்று பொருள். தண்ணீர்மயமான கடலைக் கடைந்தபோது தோன்றியவன். அதனாலேயே தண்ணீர் போன்று குளிர்ந்திருக்கிறான். பூமியில் தோன்றிய மனிதர்களுடைய உடலிலுள்ள தாபத்தையும், மனத்துயரத்தையும் தனது குளிர்ந்த கிரணங்களாலே போக்குகிறான். எக்காலத்திலும் ஆகாயத்தையே இருப்பிடமாகக் கொண்டுள்ளான்.

ஆண்டாளும் ஆயகலைகள் அறுபத்துநான்கினையும் அறிந்தவளாயுள்ளாள். "தே$_3$வி! த்வாமநு நீளயா ஸஹ மஹீதே$_3$வ்ய: ஸஹஸ்ரம் ததா$_2$–யாபி$_4$ஸ்த்வம் ஸ்தநபா$_3$ஹு த்$_3$ருஷ்டிபி$_4$ரிவ" (ஸ்ரீகுணரத்நகோஶம்–26) என்று பட்டர் அருளியபடி கமலையாகிய ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு அவயவ பூதையாக உள்ளாள். தனது கருணைநிறைந்த குளிர்ந்த கண்பார்வையினால், ஸம்ஸாரம் அடிக்கொதிக்கப்பெற்று துன்புற்றுவரும் சேதநர்களது துயரத்தையெல்லாம் போக்குகிறாள். எப்போதும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பாதாரவிந்தங்களையே பற்றிநிற்கிறாள். ஆதலால் ஆண்டாள் சந்திரனுக்கு ஸமானமானவள்.

6. **கிளியும் கோதையும்**

श्यामां द्विजाधिपसुतां श्रवणाभिरामां मञ्जुस्वनां मदनमीश्वरजं भजन्तीम् ।
गोदे गुरोस्त्रिजगतां गुणशालिनीं त्वाम् लीलाशुकीं कृतधिय: समुदाहरन्ति ॥

ஶ்யாமாம் த்$_3$விஜாதி$_4$பஸுதாம் ஶ்ரவணாபி$_4$ராமாம்
மஞ்ஜுஸ்வநாம் மத$_3$நமீஶ்வரஜம் ப$_4$ஜந்தீம் ।
கோ$_3$தே$_3$ கு$_3$ரோஸ்த்ரிஜக$_3$தாம் கு$_3$ணஶாலிநீம் த்வாம்
லீலாஶுகீம் க்ருததி$_4$ய: ஸமுதா$_3$ஹரந்தி ॥

ஹே கோதா தேவியே! அறிவுமிக்க சான்றோர்கள் தேவரீரை அன்புமிக்க கிளியாகச் சொல்லுகின்றார்கள். கிளி பசுமைநிறம் கொண்டதாக இருக்கும். பறவைகளுக்கு "த்$_3$விஜம்" என்ற பெயர் உண்டு. முதலில் முட்டையாகத்

தோன்றி பின் குஞ்சாகவருவதால் இருபிறவி. அத்தகைய பறவைகளுக் கெல்லாம் அரசன் கருடன். அப்பறவை இனத்தைச் சார்ந்ததால் கிளி கருடனுக் குப் பெண்ணுகக் கூறப்படுகிறது. மேலும் காதிற்கு இனியதான அழகிய குரலையுடையது கிளி. ''அணிமழலைக் கிளிமொழி'' என்றே போற்றப் படுகின்றது. ஸ்ரீமந்நாராயணனது புதல்வனுகிய மந்மதனைப்பற்றி அவனுக்கு வாஹனமாக விளங்குவது கிளி.

ஆண்டாளும் கிளியைப்போன்றே பசுமைநிறமுள்ளவர். அந்தணர்கட் கதிபதியாகிய ஸ்ரீவிஷ்ணுசித்தரின் புதல்வி. செவிக்கினிய செஞ்சொல்லாகிய திருப்பாவையைப்பாடிக்கொடுத்து பாடவல்ல நாச்சியாராக விளங்குபவர். திருமாலின் புதல்வனுகிய மந்மதனை ''தையொருதிங்களும்'' என்ற பதிகத்தின் மூலம் துதிப்பவராயுள்ளார். மன்மதனுக்கும் மன்மதனுகிய கண்ணனையே எப்போதும் துதித்து வருகின்றுர். பகவத்கீதை அருளிச்செய்து மூவுலகிலும் ''ஜகத்குரு'' என்று போற்றப்படுகின்ற வாசுதேவனையும் பாவைபாடி உகப்பித்த நற்குணங்கள் மிக்க கிளியேயாவார். கண்ணன் கதையையே கூறிய ஶுகாசாரியருக்கு ஒப்பாவார்.

7. காமதேனுவும் கோதையும்

वृषप्रियां विश्वजनाखिलार्थ विश्राणनोत्कां विधिवासवेड्याम् ।
श्रुतिप्रसन्नां सुरभिं विशंके स्वस्थां मखार्हां भवतीं तु गोदे ॥

வ்ருஷப்ரியாம் விஶ்வஜநாகிலார்த்த$_2$
விச்ராணநோத்காம் விதி$_4$வாஸவேட்$_3$யாம் ।
ஶ்ருதிப்ரஸந்நாம் ஸுரபி$_4$ம்விசங்கே
ஸ்வஸ்த$_2$ாம் மக$_2$ார்ஹாம் ப$_4$வதீம் து கோ$_3$தே$_3$ ॥

அம்மா ஆண்டாளே! தேவரீரை நான் காமதேனுவாகவே எண்ணுகிறேன். ''வ்ருஷஸேசநே'' என்கிற தாதுவின்படி வ்ருஷ என்பதற்கு நனைப்பது என்பது பொருள். ''வர்ஷதீதி வ்ருஷ:'' என்று உலகையெல்லாம் மழையைப் பொழியச்செய்து நனைப்பவன் இந்திரன். அவ்விந்திரனிடத்தில் பிரியமுள்ளவள் சுரபி$_4$யாகிய காமதேனு. ''விச்ராணநம்'' என்றுல் கொடைவள்ளலாய் வேண்டு வார்க்கு வேண்டியவற்றையளித்தல் என்று பொருள். 'உத்கா' என்றுல் ஆர்வம். எனவே காமதேனு கொடைவள்ளலாய் எல்லார்க்கும் எல்லாவற்றையும் வழங்குவதில் ஆர்வம் உள்ளவள். பிரமன் இந்திரன் முதலிய தேவர்களால் புகழப்படுமவள் காமதேனு. இம்மைப் பயன்களை கொடுப்பதன்மூலம் காம்யஶ்ருதியில் ஜநங்களுக்கு விஶ்வாஸத்தை உண்டு பண்ணி அந்த ஶ்ருதியை விளங்கச் செய்யுமவள் காமதேனு. ஶ்ருதிம் ப்ரஸந்நயதீதி ஶ்ருதி ப்ரஸந்நா. ஸ்வ: என்றுல் ஸ்வர்க்கம். ''ஸ்வ: திஷ்டதீதி ஸ்வஸ்தா'' ஸ்வர்க்கத்தில் இருப்பவள் காமதேனு. ''மக$_2$ார்ஹாம்'' என்றுல் யாகத்திற்கு வேண்டிய பால் நெய் முதலிய வற்றைக் கொடுப்பதால் யாகம் செய்யுமவர்களால் விரும்பப்படுமவள் காமதேனு.

ஆண்டாளோவெனில், காளை போன்ற கம்பீரமான நடையையுடைய திருமாலிடத்தில் ஈடுபாடு கொண்டவள். ''வ்ருஷப்ரியம் யஸ்யா: ஸா வ்ருஷப்ரியா'' என்பது வ்யுத்பத்தி. மண்ணுலகில் வாழும் மாந்தர்க்கெல்லாம் அவரவர்விரும்பும் புருஷார்த்தங்களையெல்லாம் கொடுக்கவேண்டும் என்ற இச்சையுடையவள் கோதாதேவி. ஆண்டாள் பூமிதேவியாகையால் பிரமன், இந்திரன் முதலிய தேவர்களால் துதிக்கப்படுமவளாய் உள்ளாள். வேதமனைத் துக்கும்வித்தாகும் கோதைத்தமிழ் என்கிற வேதத்தின் உட்பொருள்களைத் தெளிவாக தமது ப்ரபந்தங்கள் மூலம் தெரிவிப்பதால் வேதத்தை விளங்கச் செய்கிறவளாகிறாள். தனக்கு ஸ்வர்க்கமாக (சுகமாக) உள்ள பர்த்தாவின் ஸந்நிதியில் இருப்பவள் ஆண்டாள். ''பத்நீ யஜ்ஞஸம்யோகே'' என்கிறபடி இவள் விஷ்ணுபத்நீ ஆகையால் யாகங்களால் பூஜிக்கத் தகுந்தவள். எனவே ஆண்டாளைக் காமதேனு என்றே எண்ணலாம்.

8. நீராட்டத்தின் பயன்.

गोदे स्नातासि मातस्त्वमिह निगमशास्त्रोक्त मन्त्रक्रियाभ्याम्
एतेनैवातिपापा वयमपि सकला मुक्तपापा भवाम: ।
लोके दृष्टञ्च कर्मेदृशमिह सकलै: स्वप्रजारोगशान्त्यै
माता पीत्वा कषायं तनयमथ निजस्तन्य दानेन पाति ॥

கோ$_3$தே$_3$ ஸ்நாதாஸி மாதஸ்த்வமிஹ நிக$_3$மஶாஸ்த்ரோக்த மந்த்ரக்ரியாப்$_4$யாம்
ஏதேநைவாதிபாபா வயமபி ஸகலா முக்தபாபா ப$_4$வாம: ।
லோகே த்$_3$ருஷ்டஞ்ச கர்மேத்$_3$ருஶமிஹ ஸகலை: ஸ்வப்ரஜாரோக$_3$ ஶாந்த்யை
மாதாபீத்வா கஷாயம் தநயமத$_2$ நிஜஸ்தந்ய தா$_3$நேந பாதி ॥

தரணிக்கெல்லாம் தாயாகிய கோதாதேவியே! வேதங்களில் சொல்லியுள்ள மந்திரங்கள் கிரியைகள் (செயல்கள்) ஆகியவற்றின்படி தேவரீர் நீராட்டம்கண்டருளுகிறீர். நீர் நீராடுவதானால் மிகுந்த பாபங்களைச் செய்யும் நாங்களெல்லாம் எல்லாவிதமான பாபங்களினின்றும் விடுபட்டவர்களா கின்றோம். நீராடுவது நீர்; பாபங்கள் தொலைவது எங்களுக்கு என்கிறவிது பொருந்துமாவெனில்? உலகில் நாம் கண்கூடாகக் காண்கிறோம். குழந்தைக்கு நோய்வருமேயானால் அந்நோய் நீங்குவதற்காகத் தாயானவள் கஷாயம் முதலிய மருந்துகளைச் சாப்பிடுகிறாள். தன் முலைப்பாலை அக்குழந்தைக்கு ஊட்டி அதன்மூலம் நோயினின்றும் அக்குழந்தையைக் காப்பாற்றுகிறாள். லோகமாதா வாகிய ஆண்டாள் தனது ப்ரபந்தங்களாகிய தாய்ப்பாலை நமக்குக் கொடுத்து நமது பிறவிப்பிணியைப் போக்குவிக்கிறாள். விந்தையிலும் விந்தையன்றோ இது. அத்தகைய ஆண்டாளும் அரங்கனும் அனைவரையும் காப்பார்களாக.